Grade I Tamil Pandits in Tirunelveli District

* 116 *Q.* THIRU C. V. RAJAGOPAL (on behalf of THIRU M. SANKARALINGAM) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether any representation has been received stating that the annual increment was not sanctioned for those who were promoted as Grade I Tamil Pandits after 1st April 1970 in Tirunelveli District,

(*b*) if so, the number of such teachers; and

(*c*) the reason therefor ?

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள முதனிலைத் தமிழாசிரியர்கள்.

திரு சி. வி. ராஜகோபால் (திரு எம். சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் 1970-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதிக்குப் பின் முதனிலை தமிழாசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு வருட ஊதிய உயர்வு அளிக்கப்படவில்லை என முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆமெனில் அவ்வாறு உள்ளவர்கள் எத்தனை பேர்?

(உ) இதற்குக் காரணம் யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் 30 முதனிலைத் தமிழாசிரியர்களுக்கு வருட ஊதிய உயர்வு அளிக்கப்படவில்லை.

(உ) 1970-ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதிக்குப் பின்னர் நேரிடையாக முதனிலைத் தமிழாசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்களில் தகுதி படைத்தவர்கட்கு முதனிலைப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. 1970-ம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ம் தேதிக்குப் பின்னர் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாக நியமிக்கப்பட்டு முதன் நிலைத் தமிழாசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பெற்ற 30 பேர்களின் பணி இரண்டாம் நிலையிலோ அல்லது முதனிலையிலோ வரன்முறை செய்யப்படாததால் அவர்கட்கான ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்படவில்லை. இவர்களில் 29 பேர்களின் பணி இரண்டாம் நிலையில் 1974-ம் ஆண்டு மார்ச் மாதம் 21-ம் தேதியில் வரன்முறை செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ஒருவரது பணி வரன்முறை செய்யப்படவில்லை. அதுபற்றி அரசு பரிசீலனையிலுள்ளது. இந்த 30 பேர்களது பணிகளை முதனிலையில் வரன்முறை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். அதன் பின்னர்தான் ஊதிய உயர்வுகள் வழங்கப்படும்.

1975 மார்ச் 6]

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, மற்ற மாவட்டங்களில் இம்மாதிரி முதல் நிலைத் தமிழாசிரியர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு வருடாந்திர ஊதிய உயர்வு அளிக்கப்படாமலிருப்பவர்களுடைய பட்டியல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எங்கேயாவது இப்படிப்பட்ட சங்கடங்கள் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கல்வித் துறையின் கவனத்துக்குக் கொண்டு வந்தால், பரிசீலித்து ஆவன செய்யப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Daily Allowance.

* @ 93. Q. THIRU G. SWAMINATHAN AND THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether there is any disparity in the rate of Daily Allowance paid to the teacher educators working in in-service centres and the trainees who attend such training;

(*b*) if so, the reason therefor; and

(*c*) whether there is any proposal to remove the same?

நாட்படி.

திரு. ஜி. சுவாமிநாதன் & திரு. பி. ஆர். தாமஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறோம்.

(அ) பணிக்காலப் பயிற்சி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்—பயிற்றுனர்களுக்கும் அப்பயிற்சி பெற வருபவர்களுக்கும் வழங்கப்படும் நாட்படி வீதத்தில் வேறுபாடு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) வேறுபாட்டினைப் போக்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, (அ) பயிற்சி அளிக்கும் இடத்தில் தங்கி, பயிற்சி பெற வந்த ஆசிரியர்களுக்கு தமிழ்நாடு பிரயாணப்படி விதிகளின்கீழ் தினப்படி அளிக்கப்படுகிறது. பயிற்சி அளிக்கும் ஆசிரியர்களுக்கு இவ்வாறு தினப்படி அளிக்கப்படவில்லை. ஆனல் நிர்ணயிக்கப்பட்ட விசேஷ மாதாந்திர ஊதியம் அளிக்கப்படுகிறது.

(இ) & (உ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

@ 4—3—1975 வினுப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்டது.